IX. INFORMATION *Re* RESIGNATION OF THREE MINISTERS

திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவின் மீது பேசுவதற்கு முன்னால் ஒரு 'பாயிண்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ்' செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். இப்போது இந்தச் சபை நடந்து கொண்டிருக்கிறது. 5 நிமிஷங்களுக்கு முன் பி.டி.ஐ. நிறுவனத்திலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. நமது தமிழக அமைச்சரவையிலிருந்து 3 அமைச்சர்கள், அதிலும் குறிப்பாக திரு. மதியழகன் அவர்களும், திரு. வேழவேந்தன் அவர்களும், திரு. முத்துசாமி அவர்களும் விலக்கப்பட்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அது உண்மையா அல்லவா என்று எனக்குத் தெரியாது. இது பி.டி.ஐ. செய்தி. இந்தச் சபைக்கு மரியாதையும், கௌரவமும் அளித்து இந்தச் சபையிலேயே முதலில் அந்தச் செய்தி வெளியிடப்பட்டிருந்தால், அது நன்றாக இருந்திருக்கும். சபை நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்தச் செய்தியை இங்கே வெளியிட்டிருந்தால், அமைச்சர்களுக்கும் நல்ல பெயர், ஆளும்சர்க்காருக்கும் கட்சிக்கும் கூட நன்றாக இருந்திருக்கும். எனவே நான் இப்போது இந்தச் செய்தி உண்மையா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி உண்மையா இல்லையா என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்த பிறகுதான் தெரியும். அடுத்து, அப்படியே அமைச்சர்கள் விலக்கப்பட வேண்டுமென்றாலும் அதை ஒத்துக்கொள்ள வேண்டியது கவர்னர் அவர்கள் தான்; அதை அறிவிக்க வேண்டியதும் அவர்தான் என்று சட்டத்தில் இருக்கிறது. கவர்னர் அறிவிப்புக்குப் பிறகுதான் இது தெரியும். இந்த மன்றத்திலேயே முதலில் தெரிவிப்பது. பெருமையாகத்தான் இருக்கும். இதைத் தவறாக நினைக்கவேண்டாம். நான் சொல்லுவது உண்மை. முதலமைச்சர் அவர்கள் வருவார் என்று நம்பிக்கொண்டிருக்கிறேன். வந்த பிறகுதான் செய்தி தெரியும். அவரிடம் விவரம் கேட்கலாம். கவர்னர் அவர்கள் தான் செய்தியை வெளியிட வேண்டும். ஆகவே இதில் ஒன்றும் 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY CHAIRMAN : There is no point of order. I rule it out. The hon. the Leader of the Opposition will now continue.

திரு. கே. ராஜாராம் : நான் ரூலிங் மீது கேள்வி கேட்டு அதைக் குறைத்துச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் பார்லிமெண்டரி சம்பிரதாயப்படி இது நடந்திருக்க வேண்டும் என்று தான் சொல்லுகிறேன். இங்கே பத்திரிகை நிறுவனத்திலிருந்து செய்தி வெளியாகிவிட்டது. ஆனால் அமைச்சர் அவர்கள் கவர்னர் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறார்.

DEPUTY CHAIRMAN : The hon. the Leader of the Opposition will have ample opporutunity for asking for clarification when the Hon. the Chief Minister comes here. We will continue the business according to the Agenda.